# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கைப் புகையிரத சேவை**

**இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2024**

இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2024 ஆம் ஆண்டில் பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்காக இங்கு இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகளை உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **ஆகக் குறைந்த தகைமைகள் :**

(அ) வயது : 2024.08.26 ஆந் திகதிக்கு 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வி சார் தகைமைகள் : சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளடங்கலாக 06 பாடங்கள், எந்தவொரு நான்கு பாடங்களுக்கு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஒரே தடவையில் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

03. பயிலுநர் பயிற்சிக்கான தெரிவு செய்யப்பட்ட கீழ்வரும் தொழில் மற்றும் அத் தொழிலுக்குரிய காலவரையறைகளுக்கு அமைய பாடநெறிகளை பயில்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும். பாடநெறிகள் சிங்கள மொழி மூலம் மாத்திரமே நடாத்தப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறி தொடர்பில் பயிலுநர்களை தெரிவு செய்யப்படுவதுடன் அவ்வாறு தெரிவு செய்யப்படும் பயிலுநர்களின் எண்ணிக்கை முன்னால் காட்டப்பட்டுள்ளது :

| | | | |
|---|---|---|---|
| 1. | டீசல் என்ஜின் இயந்திரவியலாளர்கள் | - 03 வருடங்கள் | (NVQ Level 04) - 30 |
| 2. | பொருத்துநர்கள் | - 03 வருடங்கள் | (NVQ Level 04) - 25 |
| 3. | மின்னியல் தொழில்நுட்பவியலாளர்கள் | - 03 வருடங்கள் | (NVQ Level 04) - 30 |
| 4. | இயந்திரவியலாளர்கள் | - 03 வருடங்கள் | (NVQ Level 04) - 25 |

04. **விண்ணப்பங்கள்**: விண்ணப்பதாரிகளால் இதனுடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய மி. மீ. 297 × 210 (A-4) அளவுடைய வெள்ளை கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில், முழுமையான தகவல்கள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். தேவையான முழுமையான தகவல்களை கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. **பாடநெறி தொடர்பில் தெரிவு செய்தல் :**

(1) எழுத்து மற்றும் செயன்முறை பரீட்சை மூலம் பாடநெறி தொடர்பில் தெரிவு செய்யப்படுவதுடன், தேவையான ஆகக்குறைந்த தகைமையை கொண்ட மற்றும் 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(2) எழுத்துப் பரீட்சையானது கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும். எழுத்து மூலப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் செயன்முறை/நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(3) எழுத்து மற்றும் செயல்முறை பரீட்சையில் அதி உயர் மொத்த புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் பயிற்சிக்காக தெரிவு செய்யப்படுவதுடன், அடிப்படைத் தொழிற்சாலை பயிற்சியின் பின் நடைபெறும் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகள் மற்றும் அக்கால வரையறைக்குள் வரவு, காட்டப்படும் திறமைகள் மற்றும் பொதுப் பரீட்சையில் பெறுபேறுகள் மற்றும் மாணவர்களின் விருப்பு போன்ற அனைத்தையும் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பாடநெறிகளுக்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

06. **பரீட்சை மொழி மூலம் :** கோரப்படுவதன் அடிப்படையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும்.

07. **பரீட்சைக் கட்டணம்**: இப்பரீட்சை தொடர்பில் மீண்டும் செலுத்தப்படாத ரூபா 1,000.00 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். புகையிரத பொது முகாமையாளரின், மக்கள் வங்கி, நகர மத்திய கிளையின் கணக்கு இலக்கம் : 176-1001-2-9027313 இற்கு வரவு வைக்கும் முகமாக எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் செலுத்திய பற்றுச்சீட்டினை, விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை எதிர்கால நன்மை கருதி தம்மிடம் வைத்துக்கொள்ள வேண்டும்) பற்றுச்சீட்டுக்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். உள்வாங்கல் பரீட்சைக்கு சமுகமளிக்காமையினால் அல்லது வேறு எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதை கருத்திற் கொள்க.

08. **பரீட்சை நிலையம்**: அனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரிகளுக்காக எழுத்து மூல பரீட்சையொன்று இரத்மலானை நிலையமொன்றில் மாத்திரம் நடைபெறும்.

09. **உடன்படிக்கையை கைச்சாத்திடல்**: நிறுவனத்தின் பயிற்சி தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரிகளும் தொழிலுக்குரிய கால வரையறைக்குள் பயிற்சியை வெற்றிகரமாக மேற்கொள்வதாக இலங்கைப் புகையிரத திணைக்களத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும்.

10. பயிற்சியின் பின் பயிலுநர்களுக்குத் தொழில் வாய்ப்பினை வழங்குவதற்கு திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

11. கீழ்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து "பிரதி பொது முகாமையாளர் (பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி), இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தேமுல்ல வீதி, இரத்மலானை" இற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் வலது பக்க மேல் மூலையில் "இலங்கை பு. தொ. ப. நி./ 2023" எனக் குறிப்பிட வேண்டும். அனைத்து அறிவுறுத்தல்களும் வட்ஸ்அப், மின்னஞ்சல் மூலம் மாத்திரம் நடைபெறுவதால் அவ் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை தெளிவாக மற்றும் சரியாக குறிப்பிட்டு அனுப்பவும்.

12. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி : விண்ணப்பங்கள் 2024.08.26 ஆந் திகதி வரை ஏற்கப்படுவதோடு, தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். எஸ். முதலிகே,
புகையிரதப் பொது முகாமையாளர் (பதில்).

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு - 10,
2024, யூலை 08.

**இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2024**

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

01. முழுப்பெயர் (குடும்பப் பெயருடன்) தமிழில் மற்றும் ஆங்கிலத்தில் :

தமிழில் : ..............................................................................................

ஆங்கிலத்தில் : ..............................................................................................

02. முகவரி :

தமிழில் : ..............................................................................................

ஆங்கிலத்தில் : ..............................................................................................

03. மாவட்டம் : ..............................................................................................

04. பிறந்த திகதி : ☐☐☐☐ ☐☐ ☐☐

தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. பால் : (ஆண்/பெண்) : ..............................................................................................

06. தொலைபேசி இல. : .............................................. வாட்ஸ்அப் இல. (WhatsApp) : ..........................................

மின்னஞ்சல் முகவரி (E-Mail address) : ..........................................................................

07. கல்விசார் தகைமைகள் : க. பொ. த. (சா.த) :

ஆண்டு : ............................. சுட்டெண் : .....................................

| தொடர் இலக்கம் | விடயம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

08. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ....................................................................

09. பரீட்சைக்கட்டணப் பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

10. இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு உறுதிப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு விடயம் பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் பொருத்தமற்றவராக ஆவதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து பயிற்சியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.......................

07-630